# என்டியு–சீன நிறுவனம் சேர்ந்து ஆய்வு நிலையம் அமைப்பு

நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக் கழகமும் (என்டியு) சீனாவின் ‘வீபேங்க்’ என்ற முதலாவது இணையக் கடன் வங்கி நிறுவனமும் இணைந்து சிங்கப்பூரில் ஆய்வு நிலையம் ஒன்றைத் திறந்திருக்கின்றன.

வாடிக்கையாளர்கள் எங்கு இருந்தாலும் அப்போதைக்கு அப்போது அவர்களுடைய நிதி நிலையை நிர்வகிக்க உதவுவது இந்த நிலையத்தின் நோக்கம்.

வாடிக்கையாளர்களுக்கு, அவர்களின் பணத்தையும் சொத்தையும் எப்படி எப்படியெல்லாம் திறம்பட நிர்வகிக்கலாம் என்பது பற்றிய ஆலோசனைகளை வழங்குவது குறித்தும் இந்த இரண்டு அமைப்புகளின் வல்லுநர்கள் ஆராய்வர்.

இந்தப் பல்கலைக்கழகத்திற்கும் சீன நிறுவனத்திற்கும் இடையில் ஐந்தாண்டு உடன்பாடு ஏற்பட்டு இருக்கிறது.

புதிய நிலையத்தின் திறப்பு விழாவில் இரண்டாவது நிதி அமைச்சர் லாரன்ஸ் வோங் உரையாற்றினார். நிதி நிறுவனங்கள் சேவையாற்றும் விதமும் அவை



என்டியு தனது ஆய்வுப் பணிகளில் பயன்படுத்தும் அதிநவீன அம்சங்கள் குறித்து அமைச்சர் லாரன்ஸ் வோங்கிற்கு (இடக்கோடி) விளக்கப்படுகிறது. **படம்: என்டியு**

வாடிக்கையாளர்களுடன் தொடர்பு கொள்ளும் வழிகளும் இணையம், கையடக்கத் தொலைபேசிகள், சமூக ஊடகம் ஆகியவற்றின் மூலம் மாறி வருவதாக அமைச்சர் கூறினார்.

இந்த மாற்றங்களுக்கு ஈடு கொடுக்க, புதிய தொழில் தொடங்குவோரிலிருந்து வங்கிகள் வரை நிதி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றனர் என்றும் தேசிய வளர்ச்சி அமைச்சருமான திரு வோங் சொன்னார்.

மனிதர்கள் செய்யக்கூடிய வேலைகளை இயந்திரங்கள் பறிப்பது, மின்னிலக்கத் தளங்களின் எழுச்சியால் கடைகளுக்கு வர்த்தக ரீதியாக ஏற்படும் பாதிப்பு உள்ளிட்டவை தொடர்பாக நிலவும் அக்கறையைத் திரு வோங் சுட்டினார்.

“இன்றைய உலகில் வேலைகளைச் சிறந்த முறையில் செய்து முடிப்பதற்கு மனிதர்களையும் இயந்திரங்களையும் ஒன்றிணைப்பதற்கான வழிமுறையை நாம் காணவேண்டும்,” என்று கூறினார் அவர்.